செ. கு. எண்: 019 நாள்: 13.02.2020

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 13.2.2020</u>

ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டம், திருமால்பூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சங்கர் என்பவரின் மனைவி திருமதி லஷ்மி என்பவர் நாகவேடு கிராமம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோழவந்தான் உள்வட்டம், சங்க கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரபத்திரன் என்பவரின் மகன் திரு. ஸ்ரீதர் மற்றும் திருமங்கலம் வட்டம், புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாயாண்டி என்பவரின் மகன் திரு. செல்லப்பாண்டி ஆகிய இருவரும் ஜல்லிக்கட்டு நிகழ்வின் போது, காளை முட்டியதால் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தேத்தாக்குடி தெற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. ரவி என்பவரின் மகன் செல்வன் ராகுல் என்பவர் பேருந்தில் பயணம் செய்த போது தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டம், மேலேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. முனுசாமி என்பவரின் குழந்தைகள் செல்வி ஹரினி மற்றும் செல்வன் தக்ஷன் ஆகிய இருவரும் விளையாடிக்கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக குளத்தில் தவறி விழுந்து உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடக்கு தாமரைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜோசப் காண்ஸ்டன்டன் பெஸ்கி என்பவரின் மகன் செல்வன் பூபாலன் சார்பின் என்பவர் கடலில் குளிக்கும் போது, கடல் அலையால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கன்னந்தேரி கிராமத்தைச் சேர்ந்த திருமதி முத்தம்மாள் என்பவரின் மகன் திரு. சத்தியமூர்த்தி என்பவர் காவேரி ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், பெரியாயிபாளையம் கிராமத்தில் நிருபராக பணியாற்றி வந்த திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் திரு. ராஜசேகரன் என்பவர் கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், புழுதிக்குட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. திருமுருகன் என்பவரின் மகன் சிறுவன் ஹரிபிரசாத் என்பவர் விளையாடிக்கொண்டிருந்த போது, எதிர்பாராதவிதமாக இரும்பு கேட் சாய்ந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், நமங்குணம் மதுரா சொக்கநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மருதமுத்து என்பவரின் மகன் செல்வன் அன்பரசன், திரு. சுப்ரமணியன் என்பவரின் மகன் செல்வன் ஆணைமுத்து மற்றும் திரு. பழனிவேல் என்பவரின் மகன் செல்வன் ஜெகன் ஆகிய மூன்று நபர்களும் நொண்டிகருப்பன் ஏரியில் குளிக்கச்சென்ற போது, நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறைநகரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஞான இருதயம் என்பவர் பெரியகுளம் என்ற குளத்தில் குளிக்கும் போது, எதிர்பாராத விதமாக சறுக்கி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

பல்வேறு விபத்துக்களில் உயிரிழந்த மேற்கண்ட 14 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட துயரச் சம்பவங்களில் **உயிரிழந்த 14 நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**